நண்பன்

(081094)

மக்கள் ஏடு HARIAN TAMIL MALAYSIA NANBAN PP 11862/12/2012

குறிப்பம் 41 - நண்பன் 1079 / திருவள்ளுவர் ஆண்டு 2057 / பராபவ ஆண்டு / புரட்டாசி 16 ஹிஜ்ரி 1448 / ரபிஉல் ஆகிர் 21 / சனிக்கிழமை 3-10-2026/ HARIAN TAMIL MALAYSIA NANBAN

வெள்ளி 1.70

நஜீப் மகள் நண்பனுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் -நாளைய நண்பனில்

கோலாலம்பூர் ,அக்.3-

வீட்டுக்காவல் அனுமதியை பெற்றுள்ள தமது தந்தை டத்தோஶ்ரீ நஜீப் எப்போது வீடு திரும்புவார் என்று மற்றவர்களைப் போல தாங்களும் ஆவலோடு காத்திருப்பதாக அவரது புதல்வி நூர்யானா நஜ்வா நஜீப் மலேசிய நண்பனுக்கு வழங்கிய ஒரு சிறப்பு நேர்காணலில் தெரிவித்தார். போஸ் கூ என்று அடைமொழியிட்டு அன்பாக அழைக்கப்படும் தமது தந்தையின் சட்டபோராட்டத்தில் வழிநெடுக கூடவே இருந்து தொடர்ந்து போராடி வரும் அவர் தமது அப்பாவுக்கு கிடைத்த வீட்டுக்காவல் அவரது எதிர்காலம் மற்றும் இந்திய சமுதாயத்தின் மனங்களில் நிரந்தரமாக வீற்றிருக்கும் நஜீப் பற்றிய பல்வேறு கேள்விகளுக்கு விரிவாக பதில் அளித்தார். அவரது நேர்காணல் நாளை ஞாயிறு நண்பனில் இடம் பெறும் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

பெட்டாலிங் ஜெயா எம்பி லீ ராஜினாமா?

அதிருப்தி எம்பிக்களின் விலகல்

அன்வார் கட்சிக்குள் நெருக்கடியா?

கோலாலம்பூர், அக்.3-

பிகேஆர் கட்சியில் ஆரம்பகால போராட்டவாதிகளில் ஒருவரும் பிரபல எம்பியுமான லீ சியான் சாங் நேற்று பெட்டாலிங் ஜெயா நாடாளுமன்றத் தொகுதியில் இருந்து விலகுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து பிகேஆர் கட்சியில் அதிருப்தி. எம்பிக்களின் ராஜினாமாக்கள் தொடருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏற்கெனவே பிகேஆர் கட்சியின் முன்னாள் துணைத் தலைவர் ரஃபிஸி ரம்லி கட்சியில் இருந்து விலகியதை தொடர்ந்து அவருக்கு ஆதரவாக பல எம்பிக்கள் அணி திரண்டனர்.

பக்கம் 13

தாயாரின் நினைவு தந்தையை பெரிதும் வாட்டுகிறது

அவரை தனிமையில் விடுங்கள் மகன் முக்ரிஸ் கோரிக்கை

கோலாலம்பூர் ,அக்.3-

தமது தாயார் டாக்டர் சித்தி ஹஸ்மா மறைவைத்தொடர்ந்து, துயரத்தில் ஆழ்ந்திருக்கும் தமது தந்தை துன் மகாதீருக்கு ஒரு தனிமைக்கான வாய்ப்பை வழங்குமாறு அவரது புதல்வர் டத்தோஶ்ரீ முக்ரிஸ் மகாதீர் பொதுமக்களையும் ஊடகங்களையும் கேட்டுக்கொண்டார். தாயாரின் மறைவு எங்கள் தந்தையின் மனதை அதிகமாகப் பாதித்துள்ளது. இவ்வளவு காலம் எங்கள் தந்தையுடனே இருந்த எங்கள் தாயாரின் திடீர் மறைவு துன் மகாதீரை மிகப்பெரிய துயரத்தில் ஆழ்த்தி வருகிறது. அவர் இல்லாத தனிமை அவரை வாட்டுகிறது. எனவே இந்த இக்கட்டான தருணங்களில் இருந்து எங்கள் தந்தை மீண்டுவர அவருக்கு அனைவரும் ஒரு வாய்ப்பு தர வேண்டும்.

பக்கம் 13

காணாமல் போன 55 மலேசியர்களில்

37 நாட்களுக்குப் பிறகு ஒருவர்

உயிருடன் திரும்பிய அதிசயம்

கோலாலம்பூர் ,அக்.3-

நேப்பாளத்தில் ஏற்பட்ட பெரும் வெளைத்தில் 55 மலேசியர்கள் காணாமல்போன நிலையில் சம்பவம் நடந்து 37 நாட்களுக்கு பின்னர் ஒரு மலேசியர் உயிருடன் திரும்பி இருக்கின்ற அதிசயம் நிகழ்ந்துள்ளது. இந்த சம்பவத்தில் உயிர் தப்பிய அவர் நேப்பாளத்தில் இருந்து புறப்பட்டு மலேசியா வந்து தமது

பக்கம் 13

இன்ப அதிர்ச்சி மேலும் தொடருமா?

விஜயியை ஆர்எஸ்எஸ் பெற்ற பிள்ளை என்றேன் - அது தவறு என்று உணர்ந்தேன்!

செங்கல்பட்டு, அக்.3-

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு முன் தவெகவை தவறாக பேசியதை தவறு என்று உணர்ந்து திருப்பதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார். குறிப்பாக அப்போது நடிகர் விஜயை ஆர்எஸ் எஸ் பெற்றெடுத்த பிள்ளை என்றேன். அது தவறு என்று இப்போது உணர்கிறேன் என்றார்.

பக்கம் 13

அவசியமே இல்லாத நிலையில்

என் 12 வயது மகன்

எம்.ஏ.சி.சி. அலுவலகத்திற்கு வரவேண்டி இருந்தது

பெட்டாலிங் ஜெயா, அக்.3-

மலேசிய ஊழல் தடுப்பு ஆணையமான எம்ஏசிசி, தமது 12 வயது மகனை சொத்து அறிவிப்பு தொடர்பான கடிதத்தைப் பெறுவதற்காக தலைமையகத்திற்கு நேரில் வர வேண்டும் என்றே தாம் புரிந்துகொண்டதாக மஇகா துணைத் தலைவர் டத்தோஶ்ரீ எம்.சரவணன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் மனிதவள அமைச்சரான சரவணன், செப்டம்பர் 25ஆம் தேதி எம்ஏசிசி தலைமை ஆணையர் அப்துல் ஹலிம் அமான் தெரிவித்த கருத்துகளைத் தொடர்ந்து, தனது 12 வயது மகனும் எம்ஏசிசி தலைமையகத்திற்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் கூறினார்.

பக்கம் 13

காங்கிரஸ் கட்சிக்குப் பாடம் புகட்ட தேசிய அளவில் 3 ஆவது அணி

திமுக வகுக்கும் வியூகம்

சென்னை, அக்.3-

காங்கிரஸுடன் உறவை முறித்துக்கொண்ட திமுக தேசிய அரசியல் களத்தில் ஒரு புதிய அணியை தொடங்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. பாஜக, காங்கிரஸ் அல்லாத ஒரு வலிமையான மாநில கட்சிகளை ஒருங்கிணைக்க 3 ஆவது அணி ஒன்றை தொடங்க முதற்கட்ட பேச்சுவார்த்தைகளை அது தொடங்கி இருக்கிறது. அதில் முக்கியமாக காக்ரேச் என்ற புதிய இளைஞர் கட்சி உட்பட பல கட்சிகளுடன் அது பேசி வருகிறது.

பக்கம் 13

அடிப்படை சம்பளத்தை உயர்த்த அரசு திட்டமா?

மிக கவனமாக முடிவு செய்ய வேண்டும்

இந்திய உணவக உரிமையாளர் சங்கம் கோரிக்கை

கோலாலம்பூர் ,அக்.3-

குறைந்தபட்ச அடிப்படை சம்பளத்தை உயர்த்துவது தொடர்பான எந்தவொரு முடிவையும் அரசாங்கம் மிக கவனமாக ஆய்வு செய்யவேண்டும் என மலேசிய இந்திய உணவக உரிமையாளர்கள் சங்கம் கேட்டுக் கொண்டது. குறிப்பாக உணவகத் துறையில் அது ஏற்படுத்தும் தாக்கத்தை கருத்தில் கொள்ள வேண்டும் என அச்சங்கத்தின் தலைவர் ஜெ. கோவிந்தசாமி கரேஷ் தெரிவித்தார்.

பக்கம் 13

கூறினார். ல 2022 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

முதல் பக்கத் தொடர்ச்சி

அடிப்படை சம்பளத்தை உயர்த்த அரசு...

குறைந்தபட்ச மாத சம்பள அதிகரிப்பு நிச்சயமாக உணவக துறையை பாதிக்கும். மூலப்பொருட்களின் விலை உயர அது காரணமாக இருக்கும். நாள்தோறும் உணவகங்கள் ஈரச் சந்தை மற்றும் புதிய பொருட்களை சார்ந்து இருக்கின்றன. சம்பளம் உயரும்போது உணவக நடத்துனர்களுக்கு கூடுதல் நிதிச்சுமைகளும் ஏற்படும் என்றார் அவர். இந்த தொழிலாளர்களுக்கான கூடுதல் சம்பளம் உணவகங்களின் நடவடிக்கை செலவினங்களை உயர்த்தும். தொடர்ந்து உணவகத்தை நிலை நிறுத்துவதில் அவர்கள் பெரும் பிரச்சினையை எதிர்நோக்குவார்கள் என்றார் அவர்.

தொழிலாளர்களுக்கு ஒரு நியாயமான சம்பளம் வேண்டும் என்ற கருத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இப்போதைய குறைந்தபட்ச அடிப்படை சம்பளத்தை உயர்த்துவது உணவகத்துறையை பாதிக்கும். எனவே இதை மிகவும் கவனமாக கையாள வேண்டும் .

இன்று உணவகத் துறை அதிகமான சவால்களை எதிநோக்கியுள்ளது. அதனை இன்னும் அதிகமாக்கும் வகையில் இது அமைந்துவிடக்கூடாது. குறிப்பாக கூடுதல் சுமைகளை இது தந்துவிடக்கூடாது. ஒரு சமநிலையான அணுகுமுறையை அரசாங்கம் கையாள வேண்டும் என்று இந்திய உணவக உரிமையாளர்கள் விரும்புவதாக அவர் சொன்னார்.

முதல் பக்கத் தொடர்ச்சி

குடும்பத்தோடு சேர்ந்துள்ளார் என்று காணாமல் போனவர்களின் பேச்சாளராக விளங்கும் மணிவண்ணன் ரத்தனம் தெரிவித்தார். இந்த செய்தி துயரத்தில் மூழ்கி இருக்கும் எங்களுக்கு எல்லாம் ஓர் இன்ப அதிர்ச்சியாக இருந்து வருகிறது. இத்தனை நாட்களுக்கு பின்னர் ஒருவர் பிழைத்துக்கொண்டு இருக்கிறார் என்பது எங்களுக்கு நம்பிக்கையை வலுப்படுத்தி இருக்கிறது என்று அவர் கூறினார். சம்பந்தப்பட்ட ஆடவர் நேப்பாளத்தில் உள்ள மலேசிய தூதரகத்தை தொடர்புகொண்டு பின்னர் முறையாக நாடு திரும்பி தன் குடும்பத்தோடு சேர்ந்து இருக்கிறார் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. காணாமல் போனவர்கள் பட்டியலில் அவரும் இருந்தார். சம்பந்தப்பட்ட ஆடவர் ஒரு மலேசிய சீனர் ஆவார். அவர் தனியாக இந்த பயணத்தில் ஈடுபட்டார் என்பது தெரியவந்துள்ளது.

குடும்பத்தை தொடர்புகொண்டோம்

சம்பந்தப்பட்ட ஆடவரின் குடும்பத்தினரிடம் நானே தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு அவர் பாதுகாப்பாக திரும்பி இருப்பதை உறுதி செய்தேன் என்றார் அவர்.

கடந்த ஆகஸ்ட் 25 ஆம் தேதி இந்த சம்பவம் நடப்பதற்கு முதல் நாள் அவர் நேப்பாளத்தின் நக்தாலி வியூ போய்ண்ட் என்ற இடத்தில் அந்நாட்டின் 3.26 நேரப்படி இருந்து இருக்கிறார் தெரிய வருகிறது. நேப்பாள பெரு வெள்ளத்தில் சாலைகளும் பாலங்களும் உடைந்து அடித்து செல்லப்பட்டு சீருலைந்த நிலையில் அவர் தொடர்புகள் இன்றி தவித்து இருக்கிறார். குடிநீர் வசதியோ, மின்வசதியோ ஏதுமில்லாமல் அவரால் ஒன்றும் செய்ய இயலாமல் போயிருக்கிறது என்றார் அவர்.

சந்திக்க முடிவு செய்து இருக்கிறோம். எங்கள் கவலைகளை மட்டும் எடுத்துரைப்பது இதன் நோக்கமல்ல.

அவர்களின் வாரிசுகளான நாங்கள் அடுத்து என்ன செய்வது என்பது தொடர்பாக சிறந்த புரிந்துணர்வை பெறவும் இந்த சந்திப்பை நாங்கள் நாடுகிறோம். சம்பவம் நடந்து இத்தனை நாள் ஆகியும் காணாமல் போன எங்கள் உறவுகள் பற்றி இன்னும் எதுவுமே தெரியவில்லை.

அரசாங்கம் இது குறித்து இன்னும் மேல்மட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விரும்புகிறோம் என்றார் அவர். கடந்த ஆகஸ்ட் 26 தேதி நேப்பாளம் சீன எல்லையில் பனிப்பாறை உருகி பெருகி வந்த மிகப்பெரிய வெள்ளப்பேரிடரில் இதுவரை 1,400 பேர் மரணம் அடைந்திருக்கலாம் என்று கணக்கிடப்படுகிறது. மேலும்